எனவே, இந்தத் திட்டத்தை அரசு விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள பனகுந்தாபுரம், வாடியூர், அச்சங்குண்டம், மரியதாய்புரம், லட்சுமிபுரம், கீழகலிங்கல், மேலகலிங்கல் போன்ற கிராமங்கள் இந்த ஆய்வில் சேர்க்கப்படாமல் இருப்பதால் அவற்றையும் சேர்த்து அவற்றிற்கும் குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை அரசு குறிப்பில் ஏற்றுக்கொண்டு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய மாநில அரசுகள் முன் வந்தால் உதவுவதாக மத்திய அரசு வரவு—செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய மத்திய அரசு வரவு—செலவுத் திட்டத்தில் அறிவித்து இருப்பதில் 1989 அக்டோபர் 2-ம் தேதியன்று நிலுவையில் இருந்த விவசாயிகளுடைய கடன்களை 10,000 ரூபாய் வரையில் மத்திய அரசு தள்ளுபடி செய்யும் என்று அறிவித்து விட்டு, மாநிலங்களில் கூட்டுறவுத் துறையில் வாங்கியிருக்கக்கூடிய கடன்கள் சம்பந்தமாக மாநில அரசுகள் அதுபற்றி பரிசீலித்து தள்ளுபடி செய்தால் அதற்குரிய தொகையை மத்திய அரசு வழங்கும் என்று நிதியமைச்சர் அவர்கள் நாடாளு மன்றத்தில் அறிவித்து இருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, இதை கருத்திற்கொண்டு தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய கடன்களை, கூட்டுறவுக் கடன்களை, 10,000 ரூபாய் அளவிற்கு அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு தள்ளுபடி செய்து, விவசாயிகளை கடன்களிலிருந்து விடுவிக்க அரசு உரிய அறிவிப்பை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய நிதியமைச்சர் அவர்கள் நேற்று முன்வைத்துள்ள வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள

விவசாயிகளுடைய கடன்கள் குறித்து மாநிலங்களும் பின்பற்றுமா என்கிற ஐயப்பாட்டினை மாண்புமிகு உறுப்பினர் வீரையன் அவர்கள் இங்கே எழுப்பி இருக்கிறார்கள். மத்திய அரசு நிதி நிலை அறிக்கையில் 10,000 ரூபாய் வரையில் கடன்களை ரத்துச் செய்வதற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், அவற்றில் பெற்ற கடன்கள், அதற்கு ஈடுசெய்யக்கூடிய நிலை என்ற அளவில்தான் அறிக்கை வந்திருக்கிறது. கூட்டுறவுக் கடன்களைப் பற்றி அந்த அறிக்கையில் குறிப்பு எதுவும் இல்லை. ஒருவேளை மாநில அரசுகள் அப்படிப்பட்ட கடன் நிவாரண உதவிகளைச் செய்ய முன்வருமானால் அதற்கு உதவிடத் தயாராக இருப்பதாகவும் மத்திய அரசு நிதிநிலை அறிக்கை குறிப்பிடுகிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டினார். ஏற்கனவே இருந்த சங்கடம் என்னவென்றால் கூட்டுறவுக் கடன்களை ரத்துச் செய்கிற நேரத்தில் NABARD National Bank of Agricultural and Rural Development என்று சொல்லப்படுகிற நிறுவனம் அதனை ஏற்றுக்கொள்வதில்லை. அப்படி ரத்துச் செய்வது மாநில அரசுகளின்பாடு, நாங்கள் அதற்கு உதவி செய்யமாட்டோம் என்று கண்டிப்பாகச் சொல்லி வருகிறார்கள். கடந்த காலத்தில் கூட இந்த அரசு பொறுப்பேற்ற போதும் சரி, அதற்கு முன்பு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பேற்றிருந்த போது கடன்களை ரத்துச் செய்த போதும் சரி இந்த ''நபார்டு'' நிறுவனம் அதற்குப் பெரும் மறுப்டைத் தெரிவித்து, அதன்காரணமாக பலமுறை ''நபார்டு'' நிறுவனத்தை இந்த அரசின் சார்பாக அதிகாரிகள் சென்று, அமைச்சர்கள் சென்று சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இன்னும் கூட ஒரு முடிவாகாத சிக்கலாக அது இருந்து வருகிறது. ''நபார்டு'' நிறுவனத்தால் இதுபோன்ற இடையூறுகள் ஏற்படாது என்ற உத்தரவாதத்தை மத்திய அரசு அளித்து, மாநிலத்தில் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கு மத்திய அரசு எந்த வகையில் உதவுகிறது என்று நிலைமைகள் எல்லாம் தெளிவாக்கப் பட்ட பிறகு இது குறித்து அரசு ஆவன செய்யும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

உறுப்பினர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு மீனம்பாக்கம் அருகே ஏற்பட்ட விபத்தால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி. உகம்சந்த் அவர்கள், ''24—2—1990 அன்று அதிகாலை சுமார் 5-00 மணி அளவில் அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஜெயலலிதா அவர் களுக்குச் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் அருகில் ஏற்பட்ட விபத்தின் காரணமாகத் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள